## சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2017

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2017 டிசெம்பர் 31 இல்  இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 விடயங்களை ஞாபகப்படுத்தல்

2016 யூலை 20 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/31ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு 2016 யூன் 21 ஆந் திகதிய அபம/16/1095/739/004 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் பொருட்டு சௌமியமூர்த்தி தொண்டமான் மன்றத்தின் நிரந்தரப் பதவியணி உள்ளடங்கலாக மன்றத்தின் கீழ் வரும் 04 செயற்திட்டங்களும் அவற்றினது அசையும் மற்றும் அசையாத சொத்துக்களும் கடமைகளும் குறித்த வரிசை அமைச்சான கந்துரட்ட புதிய கிராமிய மற்றும் பெருந்தோட்ட அடிப்படை வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, 2017 சனவரி 01 தொடக்கம் மன்றத்தின் சகல செலவினமும் குறித்த வரிசை அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுவதால் மன்றத்தின் சகல நடைமுறைக் கணக்குகளதும் கொடுக்கல் வாங்கல்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே, மன்றத்திற்கான பணிப்பாளர் சபையும் 2015 தொடக்கம் நியமிக்கப்பட்டிருந்தது. அக் காரணிகளின் நிமித்தம் மன்றம் தொடர்ந்து இயங்குவது நிச்சயமற்றதாகியது.

### 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பன மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மீளமதிப்பிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 625,643,071 கிரயமுடைய சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் சம்பந்தமாக அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்டவாறு மன்றத்தின் அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் குறித்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனினும், அவ்வாறல்லாது, தொடர்ந்து மன்றத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டவாறிருந்தன.

### 2.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் ரூபா 360,962,513 அரசாங்க மானியத்தைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்கள் வருடாந்தம் தேய்மானத்துக்குள்ளாகியபோதும், அம்முதலீட்டு மானியம் காலக்கழிவு செய்யப்படும் கொள்கை மன்றத்தால் இனங்காணப்பட்டு காலக்கழிவு மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் மன்றத்தின் 4 செயற்திட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் உள்ள பதவியணியினருக்கான சம்பளம் வரிசை அமைச்சால் மேற்கொள்ளப்படுவதால் மன்றத்தின் தலைமை அலுவலகத்தாலும் ஏனைய செயற்திட்டங்களாலும் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,415,800 விழா முற்பணம் மற்றும் பதவியணியினரது கடனாகிய ரூபா 122,396 என்பன அமைச்சினால் பதவியணியினரது சம்பளத்திலிருந்து கழித்துக்கொள்ளப்பட்டபோதும், மன்றத்தின் நிதிக் கூற்றுக்களில் குறித்த சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரஜாசக்தி நிலையங்களில் 2009 டிசெம்பர் 16 தொடக்கம் 2013 நவம்பர் 01 வரை 120 சந்தர்ப்பங்களில் நடாத்தப்பட்ட V-SAT என்டெனா பராமரிப்புச் சேவைகளில் 96 சேவைகளுக்கு இணையதள சேவைக் கம்பனிக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 5,415,000 கணக்கிலிடப்படவில்லை. இது தொடர்பாக மன்றத்தின் பணிப்பாளர் (நிதி) வழங்கிய 2018 நவெம்பர் 28 ஆந் திகதிய பதிலின் பிரகாரம் வரிசை அமைச்சு இத்தொகையைக் கொடுப்பனவு செய்யாது இடை நிறுத்தியுள்ளமையால் நிதிக்கூற்றுக்களில் இது உள்ளடக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இயங்கும் கட்டிடத்தின் புனரமைப்பு வேலைகளுக்கு மன்றம் செலவழித்த ரூபா 3,092,687, 60 மாதாந்த தவணைகளில் ரூபா 51,545 வீதப்படி 2012 டிசெம்பர் முதல் அறவிடப்படுவதற்கு இரு சாராரும் இணங்கியிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,457,239 பெற வேண்டிய தொகையாக இருந்தது.

(ஆ) பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்குக் கணனித் தரவு முறைமை ஒன்றை ஏற்படுத்தும் முகமாக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2014 ஏப்ரல் 23 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 541,840 முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு செய்யப்படாதிருந்தது.

(இ) கணக்குகளில் 4 ஆண்டுகளுக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 13,698,356 முற்பணம் மற்றும் 08 கடன்பட்டோர் மீதி மற்றும் 37 கடன் கொடுத்தோர் மற்றம் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியாகிய ரூபா 16,731,700 என்பவற்றை அறவிடுவதற்கோ அல்லது தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் கையில் உள்ள காசாகக் காட்டப்பட்ட பிரஜாசக்தி செய்றதிட்டத்திற்கு வழங்கிய ரூபா 96,780 மற்றும் நோர்வூட் தொண்டமான் விளையாட்டரங்கத் தொகுதிக்கு வழங்கிய ரூபா 80,900 என மொத்தமாக வழங்கிய ரூபா 177,680 முற்பணமானது கணக்காய்வுச் சந்தர்ப்பமாகிய 2018 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கையின்றியிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரியனவாக அச்சமயத்தில் இருந்த வரிசை அமைச்சிடமிருந்து ரூபா 63,446,471 மன்றத்திற்கு மீளளிப்புச் செய்யப்பட வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தபோதும், அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட வேண்டியதாகக் குறித்த வரிசை அமைச்சின் கணக்குகளில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கொள்வனவு செய்யப்பட வேண்டிய நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் பணம் செலுத்தப்படும் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 72,726,994 க்கு சீமெந்து பிளொக் கல் இயந்திரம், விளையாட்டு மற்றும் பூசைக்குரிய பண்டங்கள், கணனிகள், நானாவித உபகரணங்கள் என்பன அரச கம்பனி ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் மன்றம் அத் தொகையைக் குறித்த கம்பனிக்கு வழங்கியிருக்கவில்லை. குறித்த கம்பனியினது 2015 ஏப்ரல் 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இத்தொகை ரூபா 73,709,130 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371(2) | வழங்கப்படும் செயல் நிமித்த முற்பணம் அவ்வேலை முடிவடைந்தவுடனேயே தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும், மன்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு 2014 ஆம் ஆண்டுக்கு முன்பே வழங்கியிருந்த முற்பணமாகிய ரூபா 523,000 மீளாய்வாண்டு இறுதி வரை தீர்வு செய்யப்படாதிருந்தது. |
| (ஆ) | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், துணைப்பாகங்கள் என்பன தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |
| (இ) | 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச் சட்டத்தின் 10(4) ஆம் பிரிவு | தனது அதிகாரங்களையும் பணிகளையும் நிறைவேற்றுகையில் மன்றம் தனக்கு தேவைப்படும் செலவினத்திற்காக தொகையை மன்றத்தின் நிதிய வருமானத்திலிருந்தே மேற்கொள்ள வேண்டுமாயினும், அப்பிரிவுக்கான திருத்தத்தை மேற்கொள்ளாது 2016 ஆம் ஆண்டுச் செலவினத்திற்குத் தேவையான நிதியை அமைச்சிடமிருந்து பெற்றிருந்தது. |
| (ஈ) | 1981 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத் திருத்த அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பந்தியின் 10(1) மற்றும் (2) ஆம் பந்திகள் | 2012 முதல் 2013 வரையான காலப்பகுதியில் நிதியத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய ஊழியர்களதும் தொழில் வழங்குபவர்களதும் பங்களிப்புத் தொகையான ரூபா 4,205,283 ஊழியர் சேமலாபம் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மன்றத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 29,644,908 பற்றாக்குறையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 32,380,913 ஆவதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 2,736,005 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது செயற்பாட்டு நடவடிக்கைகள் நடைபெறாமையால் செலவினத்தில் ஏற்பட்ட ரூபா 101,837,042 குறைவும் அரசாங்க மானியத்தில் ஏற்பட்ட ரூபா 96,593,718 குறைவும் இவ்வதிகரிப்புக்கு பிரதான காரணிகளாகின.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

சௌமியமூர்த்தி தொண்டமான ஞாபகார்த்த மன்றம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரம்பொட கலாசார நிலையத்தின் பாவனைக்கான ரூபா 1,000,000 ஆரம்பக் கொடுப்பனவு மற்றும் 60 மாதாந்தத் தவணைகளில் கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையில் ரூபா 5,840,000 என தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து 2014 நவம்பர் 25 ஆந் திகதி வாடகைக் கொள்வனவு அடிப்படையில் மிட்சுபிசி டபள் கெப் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2010 டிசெம்பர் 07 ஆந் திகதிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 150 ஆம் ஏற்பாடுகளுக்கிணங்க வரிசை அமைச்சினதும் திறைசேரிச் செயலாளரினதும் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. முறையாகத் தவணைப் பணத்தைச் செலுத்தாமையால் 2015 நவம்பர் மாதமளவில் வாடகைக் கொள்வனவுக் கம்பனி வாகனத்தைச் சுவீகரித்திருந்தது. இதற்கெனக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,565,000 பயனற்ற செலவினமாகியது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் ரூபா 150,000 செலவில் மன்றமானது வெளிவாரி மதியுரையாளர் ஒருவர் மூலம் தயாரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை 2017 ஆம் ஆண்டின் இறுதியிலும் அங்கீகரிக்கப்படாதிருந்தது. எவ்வாறாயினும், மன்றத்தின் பதவியணியினர் அமைச்சின் கீழ் பணியாற்ற வேண்டியேற்பட்டமையால் இச்செலவினம் பயனற்ற செலவினமாகியது.

### 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மன்ற அதிகாரச்சட்டத்தின் 10(2) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்திற்கு வழங்கப்பட்ட காணிகளதும் கட்டிடங்களதும் உரித்துறுதிகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நடைபெறவில்லை.

(ஆ) மன்றம் நடாத்தும் 44 பிரஜாசக்தி நிலையங்களதும் உரித்தை மன்றம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், மேலும் 35 பிரஜாசக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் நில அளவைக்கென ரூபா 2,359,298 செலவிடப்பட்டிருந்தபோதும், அக்காணி மீளாய்வாண்டின் இறுதி வரை மன்றத்தால் சுவீகரிக்கப்படாதிருந்தது.

(இ) 2010 முதல் 2013 ஏப்ரல் வரையான காலப்பகுதியின்போது பிரஜாசக்தி செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களில் கள ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கென வரிசை அமைச்சால் மன்றத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 20,484,000 நியமனக் கடிதங்களோ அல்லது குறிப்பிட்ட பணி ஒப்படைப்போ இல்லாத 90 பேருக்கு, உள்ளவாறு ஆற்றிய கடமை உறுதிசெய்யப்படாது, கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 குறைபாடுகளாகத் தோற்றுபவை

-----------------------------------------------------------------------------

கள ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக நிலவிய நலிவடைந்த முகாமைத்துவம் காரணமாக மன்றத்தின் செயற்திட்ட முகாமையாளர் மற்றும் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் என்போரால் 2011 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் வரையான காலப்பகுதியின்போது போலியான பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டு கள ஒருங்கிணைப்பு படியானது செயற்திட்ட முகாமையாளர்களது பிரத்தியேக வங்கிக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான விசாரணையின் பின்னர் இவ்வாறாகச் செலவு வைக்கப்பட்ட ரூபா 4,252,500 ஐத் திருப்பிச் செலுத்துவதற்கு அவ்வுத்தியோகத்தர்கள் இணங்கி, 2013 மே 31 ஆந் திகதியளவில் ரூபா 1,050,000 அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 3,202,500 தொகையானது 2017 டிசெம்பர் 31 வரை அறவிடப்படாதிருந்தது. அதன் காரணமாக, அத்தொகையை அமைச்சிற்கு மீளளிப்புச் செய்ய முடியாதிருந்தது. இது தொடர்பாக 2018 நவெம்பர் 28 ஆந் திகதியன்று கணக்காய்வுக்கு வழங்கிய பதிலில் இத்தொகையை அறவிடுவதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மன்றத்தின் பணிப்பாளர் (நிதி) அறிவித்திருந்தார்.

## 4.5 பொருட் தேடலும் ஒப்பந்தச் செயற்பாடுகளும்

------------------------------------------------------------------------------------------------

### 4.5.1 தாமதமாகிய செயற்திட்டங்கள்

-------------------------------------------------------------------

2010 முதல் 2012 வரையான காலப்பகுதியின்போது உடன்படிக்கைக்குள்ளான ரூபா 72,818,294 உடன்படிக்கைக் கிரயமுடைய தொண்டமான் கலாசார நிலைய நிர்மாண வேலை நடவடிக்கைகள் ரூபா 25,675,995 முடிவடைந்த வேலைப் பெறுமதியுடன் மீளாய்வாண்டளவில் நிறுத்தப்பட்டிருந்தது. இதற்குப் புறம்பாக, நிதிக்கூற்றுக்களில் இச்செயற்திட்டங்களுடன் தொடர்புடைய தீர்வு செய்யப்படாத ரூபா 7,544,265 முற்பணமும் ஒப்பந்தகாரருக்கு வழங்க வேண்டிய ரூபா 1,985,942 தொகையும் காட்டப்பட்டிருந்தன.

## 4.6 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 398,989 பெறுமதியான ஞாபகார்த்த பலகைக் கையிருப்பு நெடுங்காலமாக விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுய வேலை வாய்ப்புக் கடன் செயற்திட்டத்தின் கீழ் (Self Employement Loan Project) பிரஜாசக்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கென 2014 டிசெம்பர் 01 ஆந் திகதி ரூபா 4,048,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 44 சீமெந்து பிளொக்கல்

இயந்திரங்களில் கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 05 ஆந் திகதியளவிலும் 10 ப்ளொக் கல் இயந்திரங்கள் மாத்திரமே பிரஜாசக்தி நிலையங்களுக்கும் சுய வேலைவாய்ப்பாளர்களுக்குமிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, ரூபா 3,128,000 பெறுமதியான 34 ப்ளொக் கல் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(இ) நன்கொடையாக விநியோகிக்கப்படுவதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,794,368 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 15 கோவில் மணிகளில் 08, 377 பித்தளை பூசை விளக்குகளில் 309 மற்றும் 194 விளையாட்டு உபகரணங்களின் ஒரு பகுதியும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பயன்படுத்தப்படாது தொண்டமான் விளையாட்டரங்கில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) மன்றத்தின் சகல செலவும் அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதால் மன்றத் தலைமை அலுவலகம் மற்றும் செயற்திட்டங்கள் என்பன பேணும் வங்கி நடைமுறைக் கணக்குகளில் உள்ள ரூபா 915,415 தொகையானது 2017 பெப்ரவரி முதல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2018 செப்டம்பர் வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மன்றம் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2018 செப்டம்பர் 25 ஆந் திகதியன்றே சமர்ப்பித்திருந்தது.

### 5.2 ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன் வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட வேண்டுமாயினும், மன்றம் ஆரம்பமாகிய 2005 ஆண்டு தொடக்கம் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.